திரு, எஸ், ஜே, சாதிக் பாட்சா : இது முக்கியமான ஒரு பிரச்சினையாக இருப்பதால் அரசாங்கத்திலே ஒரு விளக்கம் கோருகிறார்கள். ஆகவே அரசாங்கம் ஒரு விளக்கம் தர முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, கி, மனோகரன் : தலைவரவர்களே. 45-வது அரசியல் சட்டத் திருத்தத்தை ரேட்டிபை செய்வதற்குரிய அந்த முயற்சி அரசின் கொள்கை என்ன் என்பதை அறிந்து கொள்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள், இது குறித்த பார்லிமென்ட் ப்ரொசீடிங்ஸ் அனைத்தையும் அனுப்பி வைக்குமாறு இங்கிருந்து எழுதப்பட்டிருக்கின்றது, அதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம், அந்த ப்ரொசீடிங்ஸ் வந்ததற்குப் பிறகு ரேட்டிபிகேஷன் செய்வதைப் பொறுத்தவரை இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த அரசு அப்படிப்பட்ட.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அரசு தரப்பிலே அதுபற்றி சொல்லியாகிவிட்டது. அமருங்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இந்த ரேட்டிபிகேஷனைப் பொறுத்த வரையில் ஆந்திர மாநிலத்திலே ரேட்டிபிகேஷன் முடிந்துவிட்டது. ஆகவே இந்த அரசாங்கம் அந்தக் கொள்கைக்கு விரோதமாக இல்லை என்றால் உடனடியாக ஒரு நாள் அசெம்பிளியைக் கூட்டி ரேட்டிபிகேஷன் செய்து தீர்மானத்தை நிறைவேற்றிவிடலாமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டிலிருந்து அதனுடைய ப்ரோசீடிங்ஸ் வந்த பிறகு நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று அரசின் தரப்பிலே சொல்லப்பட்டு விட்டதே.

3. தகவல் கோரல்

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, நான் 3 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் நான் ஒன்று சொல்லி விடுகிறேன். கூட்டத்தொடரில் கடைசி நாள் அன்று நான் ஒரு முறையை வைத்துக்கொண்டிருக்கிறேன். நிகழ்ச்சி எல்லாம் முடிந்த பிறகு, நீங்கள் கொடுத்ததை அவையிலே

1980 பிப்ரவரி 13]

கொண்டுவரவில்லை என்றால் அந்த நேரத்தில் எழுந்து சொன்னால் அது குறிப்பிலே ஏறி அது நியாயமாக இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற காரணத்திற்காகத்தான் நான் அனுமதித்துக் கொண்டு இருக்கிறேன். ஆனால் அதற்குரிய நேரம் இதுவல்ல.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் மிக முக்கியமான பிரச்சினை பற்றிக் கொடுத்திருக்கிறேன். அது தள்ளுபடி செய்யப்படவில்லை. ஆகவே அது எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கெல்லொம் நான் அரை மணி நேரம் ஒதுக்குகிறேன். ஆகவே அந்த நேரத்தில் இந்தப் பிரச்சினையைக் கேட்கலாம்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களும் இருக்கவேண்டும் என்று தாங்கள் கேட்டுக் கொள்ளவேண்டும். அவர்கள் இல்லாமல் இருந்தால் எங்களுக்கு என்ன பிரயோஜனம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவை இருக்குமானால் அவர்களும் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

4. கவன ஈர்ப்புகள்.

அ. நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதால் பக்கத்து ஏழு கிராம மக்கள் பாதிப்பு குறித்து.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர்அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தென் ஆற்காடு மாவட்டம் நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரி சுரங்கம் வெட்டுவதால் ஏழு கிராமங்களைக் காலி செய்யப்படும் நிலைமையும் அதனால் அப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதி குறித்து"

திரு. பி. முசிறிப்புத்தன்: [அமைச்சரின் பேரவைச் செயலர்] எம்மாபுரம் வட்டார விவசாயிகள் நல உரிமைச் சங்கம் அஜிஸ் நகர ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் திரு. துரை முத்துசாமி எம்.எல்.ஏ. அவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருள்கள் பற்றி ஏற்கனவே அரசின் பரிசீலனைக்கு மனுக்கள் அளித்துள்ளனர் :—

(1) தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்காக இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்காக கையகப்படுத்திய நிலங்களுக்குத் தகுந்த ஈட்டுத் தொகை அளிக்க வேண்டும் ;